

# எல்லாவிதமான நெருக்கடிகளையும் அடக்குமுறைகளையும் முறியடித்து,

# 2026- இல் மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சி அமைக்க உறுதி ஏற்போம்!

## திருச்சியில் நடைபெற்ற தி.மு.கழக இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

**திருச்சி,மே.26-**

**தி.மு.கழக இளைஞர் அணியின் மாவட்ட - மாநகர - மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் அணியின் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திருச்சியில் நேற்று நடைபெற்றது.**

**இந்தக் கூட்டத்தில், ‘முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளை, மக்களுக்கு பயனுள்ள வகையில் கொண்டாடுவது, இளைஞர் அணியின் எதிர்காலப் பணிகளை விரைந்து மேற்கொள்வது உட்பட 15 சிறப்புக்குரிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**கூட்டத்தின் நிறைவாக, இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரையின் விவரம் வருமாறு:**

“கழக நிகழ்ச்சிகள், அரசு நிகழ்ச்சிகள் என்று நேற்று முன்தினம் சென்னையிலிருந்து கிளம்பி, திருச்சி, புதுக்கோட்டை என தொடர்ந்து மூன்று நாட்கள் சுற்றுப் பயணம். ஒருங்கிணைந்த புதுக்கோட்டை மாவட்டத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களின் அறிமுகக் கூட்டத்தை முடித்துவிட்டு, இன்றைக்கு உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டத்தையும் நடத்தலாம் என்று, ஐந்து நாட்களுக்கு முன்புதான் முடிவு செய்தோம். குறுகிய கால அழைப்பில் நீங்கள் அனைவரும் இன்று திருச்சிக்கு வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

‘திருச்சி என்றாலே கழகத்துக்குத் திருப்புமுனை’ என்று சொல்வார்கள். அன்பில் தர்மலிங்கம் தாத்தா, திராவிடப்பண்ணை முத்துகிருஷ்ணன் போன்ற ஏராளமான கழக வீரர்களைத் தந்த மாவட்டம்தான் இந்தத் திருச்சி மாவட்டம்.

நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற ஒரே தலைவர் என்றால் அது நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மட்டும்தான். அதற்கு ஒரு தொடக்கமாக இருந்தது, ஒருங்கிணைந்த திருச்சி மாவட்டத்தில் இருந்த குளித்தலை தொகுதிதான். இங்குதான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதன்முதலில் தேர்தலில் நின்று வென்றார்.

நம் கழகம், திருச்சியில் எத்தனையோ மாநாடுகளை நடத்தி இருக்கிறது. 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு, இதே திருச்சியில்

மிகப்பெரிய மாநாட்டை நடத்திக் காட்டினோம். அதே திருச்சியில் இப்போது மீண்டும் நாம் சந்திக்கிறோம்.

### கழகத்தின் இதயம்

இங்கே முக்கியமான 15 தீர்மான ங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. அந்தத் தீர்மானங்களையொட்டி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் சிறப்பாகப் பேசினார்கள். நம் இயக்கத்தில் 23 அணிகள் இருக்கின்றன. ஆனால், கழகத்தின் இதயம் என்றால், அது

நம் தலைவர் அவர்கள் உருவாக்கிய இளைஞர் அணிதான்.

கலைஞர் அவர்களால் இயக்கத்தின் முதன்மை அணி என்று தொடர்ந்து பாராட்டப்பட்ட அணியும் இளைஞர் அணிதான். அப்படிப்பட்ட இளைஞர் அணியில் பொறுப்பில் இருப்பதே நமக்கெல்லாம் ஒரு மிகப்பெரிய பெருமை. கழகத்தின் நாற்றங்கால் என்று சொல்கிற அளவுக்கு இளைஞர் அணி பலரை உருவாக்கி இருக்கிறது.



### வாழ்த்துகள்

நம் முதலமைச்சர் அவர்களால் தாட்கோ தலைவராக நியமிக்கப்பட்டுள்ள, நம் இளைஞர் அணியின் மாநில துணைச் செயலாளர் என் அன்பு சகோதரர் இளையராஜா அவர்களுக்கும், நம் மாவட்ட அமைப்பாளர் பொறுப்பிலிருந்து மாநகரப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு உள்ள திருப்பூர் தங்கராஜ் அவர்களுக்கும் நமது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வோம்.

இன்னொரு முக்கியமான வாழ்த்து. 14 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டிற்குச் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் விருது பெற்றுத்தந்து நம் கழகத்திற்கும், இளைஞர் அணிக்கும், தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்த திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை அவர்களுக்கும் நம் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

இப்படியெல்லாம் நீங்கள் சாதிக்கும் போது நம் இயக்கத்திற்கும் பெருமை, இளைஞர் அணிக்கும் மிகப்பெரிய பெருமை. இன்றைக்கு இவர்கள் மட்டுமல்ல, பல ஒன்றியச் செயலாளர்களை, மாவட்டச் செயலாளர்களை, மாநில நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்களை, அமைச்சர் பெருமக்களை, துணை முதலமைச்சரை, முதலமைச்சரையே இந்த இளைஞர் அணிதான் தந்திருக்கிறது.

இந்த மேடையிலும் பல பேர் உதாரணமாக இருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், இளைஞர் அணியில் சிறப்பாக, சரியாகத் திட்டமிட்டு உழைத்தீர்கள் என்றால், உங்களுக்கான அங்கீகாரம் நிச்சயம் கிடைக்கும்.

### இளைஞர் அணியின் உழைப்பு

நீங்கள் பொறுப்புக்கு வந்து கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டன. இந்த ஒன்றரை வருடத்தில் ஏராளமான பணிகளைச் செய்து இருக்கிறீர்கள். குறிப்பாக, நம் இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டை மிகச்சிறப்பாக நடத்திக் காட்டினோம். வெற்றிமாநாடாக அது அமைந்தது.

அந்த மாநாட்டின் வெற்றிக்கு உங்கள் ஒவ்வொருவரின் உழைப்பும்தான் காரணம். மாநாடு முடிந்ததும், மக்களவைத் தேர்தல் பணியில் ஈடுபட்டோம். நம் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றிச் சுழன்று, பிரச்சாரத்தை மேற்கொண்டார். நானும் அனைத்துத் தொகுதிகளிலும் பிரச்சாரத்தை மேற்கொண்டேன்.

அப்போது மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற வேட்பாளர்களை வைத்துக்கொண்டே, ‘இந்தத் தேர்தலில் நாம் வெற்றி பெறுவோம். அதற்கு இளைஞர் அணியின் உழைப்பு முக்கியமான ஒரு காரணமாக இருக்கும்’ என்று சொன்னேன். அதைச் செய்து காட்டினீர்கள். கழகம் 40-க்கு 40 வெற்றிப் பெற்றது என்றால், அது இளைஞர் அணி இல்லாமல் சாத்தியம் இல்லை. அதை யாராலும் மறுக்க முடியாது. அதற்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கலைஞர் நூலகம்

கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு, தலைவர் அவர்கள் நமக்கு பல்வேறு பணிகளைக் கொடுத்தார்கள். எந்த இயக்கமும் செய்யாத ஒரு சாதனையாக தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகம் அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட 100 தொகுதிகளில் இளைஞர் அணியின் சார்பாக கலைஞர் நூலகங்களைத் திறந்து இருக்கிறோம். இன்னும் மீதி இருக்கிற 134 தொகுதிகளிலும் கூடிய விரைவில் திறப்போம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்த நூலகங்கள் பெயர் அளவுக்கு இல்லாமல், அதைத் தொடர்ந்து சிறப்பாக இயங்க வேண்டும். மாணவர்கள், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகின்றவர்களை அதிகமாகப் பயன்படுத்த வைக்க வேண்டும். அந்த நூலகத்தைத் தொடங்கியதற்கான பலன், வெற்றி அப்போதுதான் கிடைக்கும்.

இரண்டு நாட்களுக்கு முன்புகூட, என் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில், கலைஞர் நூலகத்தில் வாசகர் வட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். நூலகத்திற்கான பராமரிப்பு, நூலகர் ஊதியம்...

> **தலைமைக் கழகம் தொடர்ந்து பல்வேறு கூட்டங்களை அறிவிக்கிறது. அந்தக் கூட்டங்களிலும் நம் இளம் பேச்சாளர்கள் கலந்து கொண்டு சிறப்பாகப் பேசுகிறார்கள் என்ற தகவல் எனக்கு வருகிறது. இது இளைஞர் அணிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி.**

இதற்கெல்லாம் நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் எனக்குத் தெரியும்.

### பேச்சுப் போட்டி

இந்தியாவிலேயே எந்த இயக்கமும் செய்யாத வகையில், கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டியைச் சிறப்பாக நடத்தினோம். இந்தப் பேச்சுப் போட்டி இன்று மிகப்பெரிய வெற்றியாக மாறி இருக்கிறது. அதற்கும் உங்களின் உழைப்புதான் காரணம்.

### 200 இளம் பேச்சாளர்கள்

மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நீங்கள் ஒவ்வொருவரும், ஒவ்வொரு கல்லூரிக்கும் ஏறி இறங்கி, விண்ணப்பங்களைக் கொடுத்த பணிகளை, நிச்சயம் மறக்க மாட்டேன். உங்களின் இந்த முயற்சியால் 17,000 விண்ணப்பங்கள் வந்தன.

தலைவர் அவர்கள், ‘100 இளம்பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்துக் கொடுங்கள்’ என்று கேட்டார்கள். ஆனால் நாம் 200-க்கும் மேற்பட்ட சிறந்த இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து, தலைமைக் கழகத்துக்குத் கொடுத்து இருக்கிறோம்.

தலைமைக் கழகம் தொடர்ந்து பல்வேறு கூட்டங்களை அறிவிக்கிறது. அந்தக் கூட்டங்களிலும் நம் இளம் பேச்சாளர்கள் கலந்துகொண்டு சிறப்பாகப் பேசுகிறார்கள் என்ற தகவல் எனக்கு வருகிறது. இது இளைஞர் அணிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி.

### கண்டனப் பொதுக்கூட்டங்கள்

இந்தித் திணிப்பு முயற்சி, புதிய கல்விக்கொள்கை, நிதிப் பகிர்வில் பாரபட்சம், தொகுதி மறு சீரமைப்பைக் கண்டித்து இளைஞர் அணி சார்பாக, தமிழ்நாடு முழுவதும் சட்டமன்றத் தொகுதிகள்தோறும் பொதுக் கூட்டங்களை நடத்தி இருக்கிறோம். அந்தக் கூட்டங்களையும் மாவட்டக் கழகத்தோடு இணைந்து, மிகவும் சிறப்பாக நடத்தி முடித்துள்ளீர்கள். அதற்கும் எனது வாழ்த்துகள்.

இல்லந்தோறும் இளைஞர் அணி முன்னெடுப்பு மூலம் ஒவ்வொரு வீடாகச் சென்று ஆட்சியின் சாதனைகள், கழகத்தின் கொள்கைகளை எல்லாம் விளக்கி, புதிய இளைஞர்களை இளைஞர் அணியில் சேர்த்துகொண்டு இருக்கிறீர்கள்.

### சமூக வலைத்தளப் பயிற்சி

சட்டமன்றத் தொகுதிகளில் பாகத்துக்கு ஒரு இளைஞரைத் தேர்வு செய்து அவர்களுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி முகாம்களையும் தொடர்ந்து நடத்தி வருகிறோம். அந்தப் பணியையும் மிகச்சிறப்பாக செய்து வருகிறீர்கள். இதுவரை 100 தொகுதிகளில் இந்தப் பயிற்சி முகாம்கள் முடிந்து இருக்கின்றன. மீதமுள்ள தொகுதிகளிலும் விரைவில் நடத்தி முடிக்கவுள்ளோம்.

இந்தப் பயிற்சி முகாம்களின் வெற்றியை என்னால் களத்தில் நன்றாக உணர முடிகிறது. அதனுடைய ரிசல்ட் என்னுடைய, தலைவர் அவர்களுடைய சமூக வலைத்தளப் பக்கங்களில் நன்றாகத் தெரிகிறது. பலர் பகிர்வதும், நேர்மறை கருத்துகள் வருவதும் இந்த சமூக வலைத்தளப் பயிற்சி முகாம்களின் ரிசல்ட்தான்.

இன்றைக்கு களத்துக்கு இணையாக சமூக வலைத்தளத்திலும் நாம் வலிமையாக இயங்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. உங்களுக்கே தெரியும், இன்றைக்கு நிறைய கட்சிகளுக்குத் தலைமை அலுவலகமே சமூக வலைத்தளமாகத்தான் இருக்கிறது.

அதில் பொய் செய்திகளைப் பரப்புவதும், வதந்திகளைப் பரப்புவதும்தான் அவர்களின் வேலையும், கொள்கையும். எனவே, நாம் எப்படிக் களத்தில் வலுவுடன் இருக்கிறோமோ, அதேபோல் சமூக வலைத்தளத்திலும் உணர்ச்சியுடனும், வேகத்தோடும் பணியாற்ற வேண்டிய கட்டாயம் இருக்கிறது. சமூக வலைத்தளம் என்கிற தளத்திலும் நம் கருப்பு-சிவப்புக் கொடி உயர, உயர பறக்க வேண்டும்.

விரைவில் இளைஞர் அணிக்கு என்று மாவட்டத்துக்கு ஒரு சமூக வலைத்தள துணை அமைப்பாளரை நியமிக்க

தொடர்ச்சி 4–ஆம் பக்கம்